# කාර්ය සාධන වාර්තාව

## செயலாற்றுகை அறிக்கை

# Performance Report

## 2022

ජාතික අයවැය දෙපාර්තමේන්තුව
මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය

தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

Department of National Budget
Ministry of Finance, Economic Stabilazation and Economic Policies

**2022 வருடத்திற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**
**தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்**
**செலவினத் தலைப்பு இல. 240**

## உள்ளடக்கம்


**1. நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு** ....4
1.1 அறிமுகம் ....4
1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள் ....4
1.3 பிரதானபணிகள் ....5
1.3.1 எதிர்வரும் வருடத்திற்கான தேசிய வ.செ.தி. தயாரிப்புச் செயன்முறை ....5
1.3.2. நடைமுறை வருடத்தில் தேசிய வரவுசெலவுத் திட்டத்தினைச் செயற்படுத்தல் ....5
1.3.3. முற்பணக்கணக்குச் செயற்பாடுகள் ....6
1.3.4. வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் தொடர்பான செயற்பாடுகள் ....6
1.3.5. ஏனைய செயற்பாடுகள் ....6
1.4 நிறுவனக்கட்டமைப்பு ....7
**2. முன்னேற்ற மற்றும் எதிர்கால நோக்கு** ....8
2.1 வரவுசெலவுத் திருத்தங்கள் - 2022 ....8
2.1.1 குறைநிரப்பு மதிப்பீடுகள் ....8
2.1.2 ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 7வது பிரிவின் கீழ் சொத்துக்களை முடக்குதல் ....8
2.1.3 2022 இன் 21 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் ....9
2.1.4 2022 இன் 42 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் ....9
2.1.5. குறைநிரப்பு விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள் ....9
2.2 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் ....10
2.3 விபரமான செயலாற்றுகை ....10
2.4 அரச செலவின முகாமைத்துவம் ....17
2.4.1. நிதி பரிமாற்றம் ....17
2.4.2. குறைநிரப்பு ஒத்துழைப்புச் சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள் ....17
2.4.3. அரசாங்க செலவினம் ....18
**3. வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை (தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்)** ....20
3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று ....20
3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று ....22
3.3 காசுப் பாய்ச்சல் கூற்று ....23
3.4 நிதியியற் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ....25
3.4.1. அறிக்கையிடல் அடிப்படை ....25
3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை – ஏற்புடையதல்ல ....26
3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை ....26

3.7 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை ....26
3.8 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ....26
**4. செயலாற்றுகைச் சுட்டிகள்** ....27
4.1 அரச செலவினம் தொடர்பாக 2022 இல் வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்கள் ....27
**5. நிலையான அபிவிருத்தி இலக்குகளின் (SDG) அடைவுச் செயலாற்றுகை** ....28
**6. மனித வள விபரம்** ....29
6.1 பதவியணி முகாமைத்துவம் ....29
6.2 மனிதவளங்கள் பற்றாக்குறை மற்றும் செயலாற்றுகை ....29
6.3 மனித வள அபிவிருத்தி ....29
**7. இணக்கப்பாட்டு அறிக்கை** ....32
**8 பின்னிணைப்பு – I** ....39

# 1. நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

## 1.1 அறிமுகம்

தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களமானது அரசியலமைப்புச் சட்டம் மற்றும் பாராளுமன்ற சட்டஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட சட்ட வேலைச் சட்டகத்திற்குள் நிதி விடயத்திற்குப் பொறுப்பானஅமைச்சரின் வழிகாட்டலின் கீழ் தொழிற்படுகின்றது. நடுத்தரகால பேரண்ட அரசிறை வேலைச் சட்டகத்திற்குள் இணங்கும் வகையில் நடுத்தரகால செலவின வேலைச்சட்டகத்தினை (Medium Term Expenditure Framework - MTEF) துறை ரீதியான அடிப்படையில் வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரிக்கும் மைய நிறுவனமாக இத்திணைக்களம் தொழிற்படுகின்றது. இச்செயன்முறையில் நிரல் அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசாங்கத்தின் நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய திறைசேரித் திணைக்களங்கள் என்பவற்றுடன் தொடரான தொடர்புகளை பேண முடிகின்றது.

## 1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள்

### தூரநோக்கு

"அரச நிதி வளங்களினை வினைத்திறனுடனும் செயற்றிறனுடனும் ஒதுக்கீடுசெய்தல் மற்றும் முகாமை செய்வதனூடாக சமூகப் பொருளாதார அபிவிருத்தி"

### பணிக்கூற்று

அரசாங்க பொருட்கள் (Public Goods) மற்றும் தெரிவு செய்யப்பட்ட சேவைகளின் வினைத்திறன் மிக்க வழங்களுக்காக பொது நிதி வளங்களின் மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு மூலம் அரசாங்கத்தின் அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

### நோக்கங்கள்

- நிதி வளங்களினை பயன்வலு மற்றும் வினைத்திறன் மிக்கதாக ஒதுக்கீடு செய்தல்.
- அரசிறை ஒழுங்குகளைப் பேணுதல்.
- அரசிறை ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துதல்.
- அரசாங்கக் கொள்கை மற்றும் நிதி வரையறைகளுக்குட்பட்டு அமைச்சுக்கள், திணைக்களங்கள், ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகள் என்பவற்றுக்கான வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

## 1.3 பிரதானபணிகள்

### 1.3.1 எதிர்வரும் வருடத்திற்கான தேசிய வ.செ.தி. தயாரிப்புச் செயன்முறை

எதிர்வரும் வருடத்திற்கான தேசிய வரவுசெலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- ஏனைய திறைசேரித் திணைக்களங்களுடன் கலந்துரையாடி நடுத்தரகால வரவுசெலவுத்திட்ட வேலைச்சட்டகத்தினை (Medium Term Budgetary Framework - MTBF) பூர்த்திசெய்வதுடன் அதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தினையும் பெற்றுக்கொள்ளல்.
- வரவு செலவுத் திட்ட அழைப்புக்கான சுற்றுநிருபத்தினை விநியோகித்தல்.
- செலவின முகவராண்மைகளுடன் கலந்துரையாடி வரைவு மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- செலவின முகவராண்மைகளுடன் வரவுசெலவுத்திட்ட கலந்துரையாடல்கள் / மதியுரைக் கூட்டங்களை நடாத்துதல்.
- ஏனைய திறைசேரித் திணைக்களங்களுடன் கலந்துரையாடி வருமானம், செலவினம், நிதியிடல், கடன்பெறும் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) வரையறைகளைத் தீர்மானித்தல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்திற்கான மதிப்பீடுகளை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- சட்டமா அதிபர் மற்றும் சட்ட வரைஞரிடமிருந்து வரைவு ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்திற்கான சட்ட அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்தல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல். (முதலாவது வாசிப்பு)
- வரைவு வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டினை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
- ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கான இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொள்ளல்.
- ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கான குழு நிலைத் திருத்தங்களை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.
- வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு - குழுநிலை விவாதத்தில் பங்குபற்றுதல்.
- ஆணைப்பத்திரத்தினைத் தயாரித்தல் மற்றும் கௌரவ நிதி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- செலவின அதிகாரமளிப்புச் சுற்றுநிருபத்தினை விநியோகித்தல்.

### 1.3.2. நடைமுறை வருடத்தில் தேசிய வரவுசெலவுத் திட்டத்தினைச் செயற்படுத்தல்

தேசிய வரவு செலவுத்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- வரவுசெலவுத்திட்ட செயற்படுத்துகை தொடர்பாக அங்கீகாரமளித்தல் உள்ளடங்களாக வழிகாட்டல்களையும் சுற்றுநிருபங்களையும் வெளியிடுதல்.

- அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டு வரையறைகள் மற்றும் பராமரிக்கப்படும் அரசிறை ஒழுங்குகளுக்குள் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக நிதி வினைத்திறனாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு கட்டுப்பாடுகளை விதித்தல்.
- தொழிற்பாட்டு வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு செலவின முகவராண்மைகளுடன் இணைந்து செயற்படுதல்.
- நிதி ஒதுக்கீடுகளை வினைத்திறன் மிக்கதாக உறுதிப்படுத்துவதற்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீட்டினை மீள ஏற்பாடு செய்தல் (Reallocation) மற்றும் மாற்றுதல் (Transfer).
- மேலதிக ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் அவசர பொறுப்புக்கள் கருத்திட்டத்தினை (TMV) முகாமைசெய்தல்.

### 1.3.3. முற்பணக்கணக்குச் செயற்பாடுகள்

வர்த்தக, களஞ்சியசாலைகள், அரசாங்க அலுவலர்கள் முற்பணக் கணக்குகளுக்கான வரையறைகளைத் தீர்மானித்தல் மற்றும் தேவையான போது முற்பணக் கணக்குச் செயற்பாட்டு வரையறைகளைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

### 1.3.4. வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் தொடர்பான செயற்பாடுகள்

- வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளைப் பகுப்பாய்வு செய்து மிகப் பொறுத்தமான நிறுவனங்களுக்கு உரிய நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல் மற்றும் தேவையான வழிகாட்டல்களையும் வழங்குதல்.
- தேவையானவாறு வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்தல் தொடர்பான பின்னூட்டல், மீளாய்வு மற்றும் உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.
- விசேட வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்தல். (வாகன குத்தகை/ யூலை வேலை நிறுத்தக்காரர்கள் கொடுப்பனவு/மோட்டார் சைக்கிள் வழங்கல்)

### 1.3.5. ஏனைய செயற்பாடுகள்

- பாராளுமன்ற உப குழுவொன்றான அரச நிதிக் குழு (COPF) கூட்டங்களில் திறைசேரியினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதன் மூலம் அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

- பாராளுமன்ற துணைக்குழுக்களான அரச கணக்குகளுக்கான குழு (COPA) மற்றும் அரச தொழில்முயற்சிகளுக்கான குழு (COPE) ஆகியவற்றின் கூட்டங்களில் திரைசேரியினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதன் மூலம் ஆதரவை வழங்குதல்.

- தேசிய வரவு செலவுத்திட்டம் தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கான அவதானிப்புகளை தயாரித்தல்.

- பாராளுமன்ற குழுக்கள், அதிமேதகு சனாதிபதி மற்றும் பிரதமரின் கூட்டங்களில் திறைசேரியினை பிரதிநிதித்துவப்படுத்தல்.

## 1.4 நிறுவனக்கட்டமைப்பு




| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ப.நா** | - பணிப்பாளர் நாயகம் | **மே.ப.நா** | - மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | **க** | - கணக்காளர் |
| **ப** | - பணிப்பாளர் | **பி.ப** | - பிரதிப் பணிப்பாளர் | **நி.அ** | - நிருவாக அலுவலர் |
| **உ.ப** | - உதவிப் பணிப்பாளர் | **மு.சே.அ** | - முகாமைத்துவ சேவை அலுவலர் | **மொ.அ.** | - மொழிபெயர்ப்பு அலுவலர் |
| **த.தொ.உ** | - தகவல் தொழில்நுட்ப அலுவலர் | **அ.அ** | - அபிவிருத்தி அலுவலர் | **அ.உ** | - அலுவலக உதவியாளர் |

# 2. முன்னேற்ற மற்றும் எதிர்கால நோக்கு

2023 வருடத்துடன் தொடர்பான வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் அதற்குத் தேவையான சட்டரீதியான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 2022 வருடத்திற்காக 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டமானது 2022 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டத்தின் மூலம் மற்றும் 2022 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டல்கள் மற்றும் உதவிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

## 2.1 வரவுசெலவுத் திருத்தங்கள் - 2022

ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்கான பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த செலவினம் பாராளுமன்றத்தின் குறைநிரப்பு மதிப்பீடுகளின் அங்கீகாரத்துடன் அல்லது நிதி அமைச்சரால் கூடுதல் விசேட சட்ட உத்தரவுகளை வழங்குவதன் மூலம் திருத்தப்பட்ட சட்டமூலத்தை சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 7 இன் படி செயற்படுவதன் மூலம் திருத்தப்படலாம்.

2022 ஆம் ஆண்டிற்கான 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் 2021.12.10 அன்று பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஒட்டுமொத்தச் செலவினம் 2022 ஆம் ஆண்டிற்குள் மேற்கூறிய அனைத்து அணுகுமுறைகள் மூலம் திருத்தங்களுக்கு உட்பட்டது. குறிப்பாக, சட்டத்திற்கான இரண்டு திருத்தப்பட்ட சட்டமூலங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

### 2.1.1 குறைநிரப்பு மதிப்பீடுகள்

2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் சமூக-பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் பொது நிதி முகாமைத்துவம் மிகவும் சவாலானதாகக் காணப்பட்டது. குறிப்பாக, உயர் பணவீக்கம் மற்றும் வாழ்வாதாரத்தை பராமரிப்பதில் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக சிரமங்களை எதிர்கொண்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கம் வளங்களை ஒதுக்க வேண்டியிருந்தது. இதற்கு மேலதிகமாக, விலைவாசி உயர்வை எதிர்கொள்ளும் பொது சேவையின் பராமரிப்புக்கான அதிகரித்த செலவினங்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டியிருந்தது. மேற்கண்ட விடயங்களின் அடிப்படையில், ரூபா 695 பில்லியன் குறைநிரப்பு மதிப்பீட்டை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த நிலையில் மேற்படி குறைமதிப்பு மதிப்பீடு 2022.08.06 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அன்றே அங்கீகரிக்கப்பட்டது.

### 2.1.2 ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 7வது பிரிவின் கீழ் சொத்துக்களை முடக்குதல்

புதிய தேவைகளுக்கான ஒதுக்கீடுகளை செய்வதற்கு இணையாக அரச வருமானத்தை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்க முடியாது என்பதாலும், எதிர்பார்த்த வருமானத்தைக் கூட வசூலிப்பதில் சிரமம் ஏற்பட்டதாலும், ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 7 ஆவது பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இணங்க அரசாங்கத்தின் ஒப்புதலுடன் குறைந்த முன்னுரிமையுடையதாக அடையாளம் காணப்பட்ட ரூபா 300 பில்லியனை முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 2.1.3 2022 இன் 21 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம்

2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் காரணமாக, அமைச்சரவையின் கட்டமைப்பு மற்றும் அமைச்சின் விடயங்களில் ஒதுக்கீடு ஆகியவற்றில் கடுமையான மாற்றம் ஏற்பட்டது. அப்போதைய அரசாங்க அமைச்சுக்கள் முற்றாக ஒழிக்கப்பட்டு சில அமைச்சுக்கள் ஒன்று அல்லது சில அமைச்சுக்களுடன் இணைக்கப்பட்டன. இதன் விளைவாக, 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில செலவினத் தலைவர்களின் பொறுப்பு தொடர்பாக ஒரு சிக்கல் நிலைமை எழுந்ததுடன், அமைச்சுகளை நீக்குதல் மற்றும் இணைப்பதன் மூலம் கணக்கியல் நடவடிக்கைகளைப் பேணுவதும் ஒரு பிரச்சினையாக இருந்தது.

இந்தப் பின்னணியில், அமைச்சுக்களின் சுமுகமான இருப்பை உறுதி செய்வதற்கும் கணக்கியல் நடவடிக்கைகளை இலகுவாகவும் தெளிவாகவும் பேணுவதற்கும் 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. அந்த வகையில் ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டதுடன், மேலே 2.1.1 இன் கீழ் காட்டப்பட்டுள்ள குறைநிரப்பு மதிப்பீடு மற்றும் 2.1.2 இன் கீழ் சுட்டிக்காட்டியபடி முடக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்குத் தேவையான சரிசெய்தல்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, நடைமுறையிலுள்ள பொருளாதார நிலைமைகளில் மேலதிகமான செலவினங்களுக்கான ஏற்பாடுகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு தயாரிக்கப்பட்ட ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலம் 2022.09.09 அன்று 2022 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமாக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

### 2.1.4 2022 இன் 42 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம்

2022 ஆம் ஆண்டில், உள்நாட்டு மூலதனச் சந்தையில் வட்டி விகிதங்கள் முன்னெப்போதும் இல்லாத உயர்வைக் கண்டன. மேலும், எதிர்பார்க்கப்படும் வருமானத்தை அதிகரிப்பதில் உள்ள சிரமம் காரணமாக, முதிர்ச்சியடைந்த திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளை வெளியிடுவதற்காக திறைசேரி உண்டியல்கள் அல்லது திறைசேரி முறிகளை மீண்டும் வெளியிடப்பட வேண்டியிருந்தது.

மேற்கூறிய கடன் சாதனங்களின் முக மதிப்பில் கடன் பதிவு செய்யப்படுவதால், திறைசேரியினால் உண்மையில் பெறப்பட்ட தொகையை விட அதிகமான தொகை கடனாகக் கணக்கிடப்படுகிறது. அதன்படி, 2022 ஆம் ஆண்டிற்கான பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடன் வரையறையினை கடைப்பிடிப்பது கடினமாக இருந்ததால், கடன் வரையறையினை ரூபா 663 பில்லியன் இனால் அதிகரிப்பதற்கான ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமூலம் மீண்டும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இது 2022 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டமாக 2022 நவம்பர் 30 அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

### 2.1.5. குறைநிரப்பு விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள்

நிதி அமைச்சர் அரசியல் அமைப்பின் மூலம் விசேட சட்ட ஆணைப்பத்திரங்களை விநியோகிப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த ஆணைப்பத்திரங்கள் அரசாங்க செலவினங்களை மேற்கொள்வதற்கு திரட்டு நிதியத்திலிருந்து பணத்தினை மீளப் பெறுவதற்கான அதிகாரத்தினை வழங்குவதுடன் குறித்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் காணப்படும் விசேட சட்ட சேவைகளுக்கேற்ப அங்கீகரிக்கப்படுகின்றது. அட்டவணை 2.1.2 இல் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கங்களுக்கான மேலதிக நிதியினைப் பெற்றுக்கொள்ளும் வகையில் 2022 இல் ரூபா 251 பில்லியன் பெறுமதியான அவ்வாறான 02 ஆணைப்பத்திரங்கள் நிதி அமைச்சரினால் விநியோகிக்கப்பட்டது.

**அட்டவணை 2.1.2: குறைநிரப்பு விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள்**

| இல. | செலவி தலைப்பு இல. | நிறுவனம் | நோக்கம் / குறிக்கோள் | தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | 01 | அதிமேதகு சனாதிபதி | முன்னாள் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு 14.07.2022 முதல் 31.12.2022 வரை ஓய்வூதிய பலன்கள் வழங்கல் | 544,113 |
| 02 | 249 | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் | கடன் சேவைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாட்டுப் பற்றாக்குறை | 251,000,000,000 |

### 2.2 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

முற்பணக் கணக்குகளின் கீழுள்ள செயல்பாடுகளில், தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கிகள் மற்றும் வணிக இயல்புடைய செயற்பாடுகள் மூலம் செயல்படுத்தப்படும் சொத்துக் கடன் தவிர, பொது அதிகாரிகளுக்கு வழங்கப்படும் முன்பணங்கள் அடங்கும். 2022 ஆம் ஆண்டிற்கான முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் உண்மையான செலவு ரூபா 19.14 பில்லியனாக மதிப்பிடப்பட்ட அதிகபட்ச செலவினம் ரூபா 29.19 பில்லியன் உண்மையான வரவுகள் ரூபா 19.40 பில்லியன், மதிப்பிடப்பட்ட குறைந்தபட்ச வரவு வரையறை ரூபா 23.19 பில்லியன் ஆகும். அதன்படி, 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட மொத்த செலவின வரைறைகளுக்குள் முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், மதிப்பிடப்பட்ட பெறுகை வரைறையினை அடைய முடியவில்லை.

2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டின் இறுதி வரை தேசிய வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கை 03/2022 மூலம் பதவிநிலை அலுவலர்களுக்கான கடன் வசதிகள் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக, 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், முன்கூட்டிய கணக்கு நடவடிக்கைகளின் செயல்திறனில் 4 சதவிகிதம் குறைவு ஏற்பட்டது.

அதாவது கடனுதவி ரூ. 2021 ஆம் ஆண்டில் 19.95 பில்லியனாக இருந்தது, 2022 ஆம் ஆண்டில் 19.14 பில்லியனாக குறைந்துள்ளது.

மதிப்பீடுகளை தயாரிக்கும் போது இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தின் காரணமாக, ஒவ்வொரு செலவினத் தலைப்பின் கீழும் பணியாளர்களை துல்லியமாக இனங்காண இயலாமை, முன்கூட்டிய கணக்கு நடவடிக்கைகளின் செயல்திறனை மேலும் மோசமாக பாதித்துள்ளது.

2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்படி 2022 ஆம் ஆண்டில் வரையறைகளில் திருத்தங்கள் தேவைப்படும் 35 முன்பணக் கணக்குகளுக்கு (வணிக முற்பணக் கணக்குகள் உட்பட) 2023.03.22 அன்று பாராளுமன்ற அங்கீகாரம் பெறப்பட்டது.

## 2.3 விபரமான செயலாற்றுகை

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| 1. 2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினைச் செயற்படுத்தல் மற்றும் செலவின முகாமைத்துவம். | செலவு முகாமைத்துவம் குறித்த வழிமுறைகளை வழங்கும் வ.செ.தி. அங்கீகார சுற்றறிக்கைகளை வெளியிடுதல். | அரசாங்கச் செலவுகளை திறமையாக நிர்வகித்தல். | 2021.12.21 ஆந் திகதிய 03/2021 ஆம் இலக்க தேசிய வ.செ.தி. சுற்றறிக்கை (2022 வ.செ.திட்ட செலவினத்தை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்குதல் மற்றும் அரச செலவின முகாமைத்துவம்) வெளியிடப்பட்டது. |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 5(1) உறுப்புரை மற்றும் நி.பி 66 மற்றும் நி.பி 69 இன் கீழ் நிதி மாற்றலுக்கான அதிகாரமளித்தல். | அங்கீகரிக்கப் பட்ட மதிப்பீட்டிற் குள் செலவினத் தை முகாமை செய்தல். | நிதி ஏற்பாட்டுக்கான 1,556 கோரிக்கைகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இதில் 166 கோரிக்கைகள் நிகழ்ச்சித்திட்ட மாற்றலாகவும் 1,360 கோரிக்கைகள் கருத்திட்டங்களுக்கு இடையிலான மாற்றல் களுக்கானதாகும். மாற்றலுக்கான கோரிக்கைகள் 30 இற்கு நி.பி. 69 இன் கீழ் அதிகாரமளிக்கப்பட்டது. |
| | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 (1) ஆவது பிரிவின் கீழ் நிதி ஏற்பாட்டினை மீண்டும் ஒதுக்கீடு செய்தல். | செலவின நிறுவனங்களி ன் தொழிற்பாட் டுக் காக அவற்றிற்கா ன மேலதிக நிதி ஏற்பாட்டினை வழங்குதல் | எதிர்பாராத மற்றும் அவசர செலவினங்கள் (உ+ம் கொவிட் – 19 தொற்றுநோய் நிலைமை) மற்றும் செலவின மதிப்பீடுகளில் காணப்படும் ஏதேனும் குறைபாட்டினை நிவர்த்திப்பதற்கு குறித்த வருடத்தில் குறை நிரப்பு ஒதுக்கீட்டுக்கான 1060 கடிதங்களுக்கு 421.1 பில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. |
| | இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மேலதிக ஒதுக்கீடுகளை வழங்குவது தொடர்பான மேலதிக மதிப்பீடுகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தல். | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் விதிகளைப் பின்பற்றுதல். | வழங்கப்பட்ட அனைத்து மேலதிக ஒதுக்கீடு களையும் உள்ளடக்கிய 11 அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | 2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினைத் திருத்துதல் | 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அங்கீகாரத்தின் போது இருந்த அமைச்சுக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப தேவையான மாற்றங்களைச் செய்தல் மற்றும் புதிய அத்தியாவசிய செலவினங்களைச் செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல். | 2022 இன் 21 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் |
| | 2022 இன் 21 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினைத் திருத்துதல் | 2022 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 2(1)(ஆ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கடன் வரையறைகளை ரூபா 663 பில்லியன் மற்றும் அதற்கேற்ப அதைத் திருத்துதல். | 2022 இன் 42 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| 2. 2023 வருடத்திற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டினை தயாரித்தல். | வருடாந்த வ.செ.தி. மதிப்பீடுகளைத் தயாரிப்பது குறித்த (வ.செ.தி. அழைப்பு) வழிகாட்டுதல்களை விநியோகித்தல். | அனைத்து செலவு நிறுவனங்களின் வழிகாட்டுதல்க ளைப் பின்பற்றி ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல். | 2023 வருடத்திற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களைக் கொண்ட 2022.09.02 ஆந் திகதிய 05/2022 ஆம் இலக்க சுற்றுநிருபம் வெளியிடப்பட்டது. |
| | பொதுத் திறைசேரியின் உரிய திணைக்களங்கள் மற்றும் செலவிடும் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து வரைவு வருடாந்த வ.செ.திட்டத்தைத் தயாரித்தல். | அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் மேம்பாட்டு இலக்குகளின் ஆண்டு இலக்குகளை அடைவதை உறுதிசெய்தல். | கௌரவ நிதி அமைச்சரின் தலைமையில் சம்மந்தப்பட்ட தரப்பினருடன் முழுமையான வரவுசெலவுத்திட்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. |
| | தொடர்புடைய அமைச்சுக்களுடன் வ.செ.தி. கலந்துரையாடல் களை நடத்துதல். | முன்னுரிமை களைகவனத் திற்கொண்டு உரிய நிதி முகாமைத்து வம் மற்றும் நிதி ஒழுங்குகளுடன் தொடர்புடைய நிதி இலக்கினை அடைந்துகொள்ள முடியுமான வ.செ. திட்டத்தினைத் தயாரித்தல். | திறைசேரி செயலாளர், திறைசேரியின் பிரதிச் செயலாளர்கள் மற்றும் தொடர்புடைய திணைக்களங்கள்/ நிறுவனங்களின் தலைவர்களுடன் மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | 2023 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க தேவையான ஏற்பாடுகளை செய்தல். | ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்<br><br>2023 விடயங்களுக்க மைவாக தயாரிக்கப்பட்ட வ.செ. மதிப்பீடு உரிய திகதியில் அச்சிடுதல் மற்றும் விபரமான மதிப்பீட்டினைத் தயாரித்தல்.<br><br>ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படல் | 2023 வருடத்திற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2022.10.05 ஆந் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.<br><br>ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2022.10.18 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. (முதலாவது வாசிப்பு)<br><br>2023 செயற்பாடுகளுடன் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடு உரிய திகதியில் அச்சிடுதல் மற்றும் விபரமான மதிப்பீட்டினைத் தயாரிக்கப் பட்டதுடன் இணைய தளங்களில் பதிவேற்றப்பட்டது.<br><br>2022.11.14 ஆந் திகதிய வரவு செலவுத்திட்ட உரையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் (இரண்டாவது வாசிப்பு)<br><br>2022.11.15 முதல் 2022.12.08 வரை வ. செ. தி. விவாதம் இடம் பெறுதல்.<br><br>2022.12.08 ஆந் திகதி பாராளுமன்றத்தின் மூலம் ஒதுக்கீட்டுச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டது.<br><br>2022 இன் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் 2022.12.08 ஆந் திகதி கௌரவ சபாநாயகரினால் கையொப்பமிடப்பட்டது. |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| | கௌரவ நிதி அமைச்சரினால் ஆணைப்பத்திரம் வழங்குதல்.<br><br>செலவின முகாமைத்துவம் தொடர்பான வழிகாட்டலைவழங்கி அதிகாரத்தினை வழங்குகின்ற சுற்றுநிருபத்தினை வெளி யிடுதல். | செலவினத்திக்கு அதிகாரமளித்தல் | 2022.12.15 ஆந் திகதி கௌரவ நிதி அமைச்சரினால் ஆணைப்பத்திரம் விநியோகிக்கப்பட்டது.<br><br>2022 வருடத்திற்கான செலவினத்திற்கு அங்கீகாரம் வழங்கல் மற்றும் அரச செலவின முகாமைத்துவம் தொடர்பான வழிகாட்டலினை வழங்கி 2022.12.27 ஆந் திகதிய 09/2022 ஆம் இலக்க சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது. |
| 3. முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் | முற்பணக் கணக்குகளுக்கான வருடாந்த வரையறைகளை நிர்ணயிக்கும் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அட்டவணையைத் தயாரித்தல்<br><br>முற்பணக் கணக்குகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளை தேவைகளின் அடிப்படையில் திருத்துதல். | முற்பணக் கணக்கு செயல்பாடுகளின் சீரான செயற்பாடு. | 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அட்டவணை III<br><br>வருடத்தின் போது 35 முற்பணக் கணக்குகளின் வரையறைகள் திருத்தப்பட்டு, ஆண்டின் இறுதிக்குள் (22.03.2023 அன்று) தொடர்புடைய திருத்தங்கள் உட்பட எஞ்சிய தராதரங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |
| 4. பாராளுமன்ற செயற்குழுக்களுக்கு ஒத்தழைப்பு வழங்குதல் | பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் குழு (COPA), அரச நிதிக் குழு (COPF), அரச தொழில் முயற்சிகள் மீதான குழு (COPE) கூட்டங்களில் பிரதிநிதித்துவப் படுத்தல். | பாராளுமன்ற செயற்குழுக்களுக்கு அழைப்பு விடுக்கும்போது திணைக்களத்தைபிரதிநிதித்துவப் படுத்தி தேவையான ஒத்தழைப்பினை வழங்குதல். | செயற்குழு கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் ஒவ்வொரு கூட்டத்திற்கும் அலுவலொருவர் / அலுவலர்கள் பங்குபற்றி உள்ளனர். |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| 5. தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் உள்ளக முகாமைத்துவம். | பின்வரும் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்; (அ) திணைக்கள செயலாற்றுகை அறிக்கை (ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு (இ) நிதி அமைச்சின் ஆண்டறிக்கையின் செலவின மீளாய்வு அத்தியாயம். | உரிய திகதிக்கு முன்னர் அறிக்கைகளை சமர்ப்பித்தல் | பின்வரும் அறிக்கைகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படும் (அ) செயலாற்றுகை அறிக்கை (ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு 2022 (இ) செலவின மீளாய்வு 2022 |
| | திறன் விருத்தி | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி மூலம் மனித வளத்தை மேம்படுத்துதல். | தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு உள்ளூர் பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை, 07 உத்தியோகத்தர்கள் ஆன்லைனில் (மெய்நிகர்) நடத்தப்பட்ட வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியுள்ளனர். |
| | திணைக்களத்தின் முற்பணக் கணக்குகளின் கட்டுப்பாடு | முற்பணக்கணக்குகளின் வரையறைக்கு இணங்க தே.வ.செ. திட்டத் திணைக்களத்தின் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் கடன் முற்பணம் வழங்குதல். | அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளை கடைபிடித்து, இடர் கடன்கள், சைக்கிள் கடன்கள், விசேட முற்பணங்கள் மற்றும் பண்டிகை முற்பணங்கள் என்பவற்றுக்கு ரூபா 5,841,414.78 வரை வழங்கப்பட்டுள்ளது. |
| | கணக்காய்வு வினவல்களுக்கு பதிலளித்தல். | கணக்காய்வு வினவல்களைக் குறைத்தல். | கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட அனைத்து கணக்காய்வு கேள்விகளுக்கும் (கணக்காய்வு வினாக்கள் பத்து (10) பதிலளிக்கப்பட்டது. |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | செயலாற்றுகை |
|---|---|---|---|
| 6. வெளிநாட்டு அபிவிருத்தி பங்காளர்களுக்கு (ச.நா.நி., உலக வங்கி, ஆ.அ.வ) வசதி வழங்கல். | தேவையான போது அபிவிருத்தி பங்காளர்களுடன் கலந்துரையாடலில் பங்கேற்றல். | அபிவிருத்தி பங்காளர்களுடன் உள்ளக தொடர்புகளை பேணுதல். | உரிய சந்தர்ப்பங்களில் அபிவிருத்தி பங்காளர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு பௌதிக அல்லது நிகழ்நிலையில் தொடர்பிணை ஏற்படுத்தி தேவையான நடவடிக்கை எடுத்தல். |

## 2.4 அரச செலவின முகாமைத்துவம்

### 2.4.1. நிதி பரிமாற்றம்

ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 5, நிதி ஒழுங்குமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வைர்மென்ட் நடைமுறையின் கீழ் நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த செலவின வரம்பிற்குள் பயன்படுத்தப்படாத விதிகளை நிறுவனங்களுக்கு மாற்ற அனுமதிக்கிறது. அதன்படி, 2022 ஆம் ஆண்டில் தேசிய வரவு செலவுத் திணைக்களம் நிதிப் பிரமானக் குறிப்பு 66 மற்றும் 69 இன் கீழ் 1,556 நிதி மாற்றல்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. இதன் மதிப்பு ரூபா 313 பில்லியனாகும்.

### 2.4.2. குறைநிரப்பு ஒத்துழைப்புச் சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள்

செலவின நிறுவனங்களின் மதிப்பீடு செய்ய முடியாத அவசர மற்றும் எதிர்பாரா நிதித் தேவைகளுக்காக 2022 அச்சிடப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அதிவிசேட வழிகாட்டல்களுக்கு அமைவாக மேலதிக நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்கு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் மூலம் செலவினத் தலைப்பு 240 இன் கீழ் குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் அவசர தேவைப்பொறுப்பு கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டின் மூலம் ரூபா 67.6 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2022 வருடத்தில் பல்வேறு செலவின அலகுகளுக்காக ரூபா 72.7 பில்லியன் மேலதிக நிதி ஒதுக்கீடாக வழங்கப்பட்டுள்ளது.

2021 இன் 30 ஆம் இலக்க ஒக்கீட்டுச் சட்டத்தின் தேவைகளுக்கேற்ப அவ்வாறு வழங்கப்பட்ட மேலதிக ஒதுக்கீடு தொடர்பான அறிக்கை அவ்வப்போது பாராளுமன்றத்திற்குச் சமர்பிக்கப்பட்டுள்ளது. 2022 வருடத்துடன் தொடர்பான இவ்வாறான அறிக்கைகள் 11 பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, 2003 இன் 03 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்திற்கேற்ப மேலதிக நிதி ஒதுக்கீடு வழங்கல் தொடர்பான தகவல் நிதி அமைச்சின் வருடாந்த அறிக்கையிலும் முன்வைக்கப்பட்டுள்ளது.

### 2.4.3. அரசாங்க செலவினம்

கடன் திருப்பிச் செலுத்துதல் உள்ளடங்களாக அரசாங்கத்தால் செய்யப்பட்ட மொத்த செலவு 2022 ஆம் ஆண்டில் ரூபா 5,986 பில்லியனாக இருந்ததுடன் 2021 இல் ரூபா 4,456 பில்லியனுடன் ஒப்பிடுகையில் அது 22.7 சதவீதம் அல்லது பெயரளவில் ரூபா 1,107 பில்லியன் அதிகரிப்பாகும்.

அரசின் மொத்த செலவினத்தில் 59 சதவீதம் அதாவது ரூபா 3,539 பில்லியன் மீண்டெழும் செலவினமாகும், இது 2021 இல் காணப்பட்ட ரூபா 2,757 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இல் 28.3 சதவிகிதம் அதிகரித்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் மொத்த மூலதனச் செலவு 2021 இல் 2,122 ரூபாவுடன் ஒப்பிடுகையில் ரூபா 2,447 பில்லியனாக 15.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதற்கிடையில், அரசாங்கத்தின் மூலதனச் செலவினங்களின் பயன்பாட்டு விகிதம் 2021 இல் 43 சதவீதத்திலிருந்து 2022 இல் 40.8 சதவீதமாக கணிசமாகக் குறைந்துள்ளது.

**அட்டவணை 2.4.3 - செலவின வகுதியின்படி அரசாங்க செலவினம்**

| | ரூபா பில். | மீண்டெழும் செலவின சதவீதம் | மொத்த செலவின சதவீதம் |
|---|---|---|---|
| **மொத்த மீண்டெழும் செலவினம்** | **3,539.2** | **100** | **59.12** |
| மத்திய அரசாங்க ஆள்சார் வேதானதிகள் | 712.9 | 20.14 | 11.91 |
| பிரயாணச் செலவினம் | 16.1 | 0.46 | 0.27 |
| வழங்கல்கள் | 159.3 | 4.50 | 2.66 |
| பராமரிப்புச் செலவினம் | 8.4 | 0.24 | 0.14 |
| சேவைகள் | 56.0 | 1.58 | 0.94 |
| மாற்றல்கள் (மாகாண சபைகள் மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கான மாற்றல்கள்) | 1,021.1 | 28.85 | 17.06 |
| வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் கழிவு | 1,565.2 | 44.22 | 26.15 |
| ஏனைய மீண்டெழும் செலவினம் | 0.2 | 0.01 | 0.004 |
| | **ரூபா பில்.** | **மூலதனச் செலவின சதவீதம்** | **மொத்த செலவின சதவீதம்** |
| **மொத்த மூலதனச் செலவினம்** | **1,014.3** | **100** | **16.94** |
| மொத்த மூலதனச் செலவினம் | 18.8 | 1.86 | 0.31 |
| மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | 74.5 | 7.35 | 1.25 |

| | | | |
|---|---|---|---|
| மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 120.9 | 11.92 | 2.02 |
| மூலதன மாற்றல்கள் | 438.7 | 43.25 | 7.33 |
| நிதியியற் சொத்துக்களின் கொள்வனவு | 6.3 | 0.62 | 0.11 |
| ஆற்றல் விருத்தி | 355.0 | 35.00 | 5.93 |
| **ஏனைய மூலதன செலவினம்** | **1,432.5** | | **23.93** |
| **பொது படுகடன் தீர்த்தல்** | **5,986.0** | | **100** |

# 3. வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை (தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்)

## 3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

ஏசீஏ -எப்

**2022 டிசம்பர் 31 முடிவுற்ற காலத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

| வ. செ. திட்டம் 2022 ரூபா | | குறிப்பு | உண்மையான ரூபா 2022 | மீள திருத்தப்பட்டது 2021 ரூபா | |
|---|---|---|---|---|---|
| - | **வருமான பெறுகைகள்** | | | | |
| - | வருமான வரி | 1 | | | ஏசீஏ -1 |
| - | உள் நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் வரி | 2 | | | ஏசீஏ -1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரி | 3 | | | ஏசீஏ -1 |
| - | வரியல்லா வருமானம் மற்றும் பிற | 4 | 909,850 | 2,910,000 | |
| - | **மொத்த வருமான பெறுகைகள்(அ)** | | **909,850** | **2,910,000** | |
| - | **வருமானமல்லாத பெறுகைகள்** | | | | |
| - | திறைசேரி கட்டுநிதி வைப்புகள் | | 264,438,000 | 410,292,000 | ஏசீஏ -3 |
| - | வைப்புக்கள் | | 100,677 | 21,396,032 | ஏசீஏ -4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 11,094,209 | 16,157,388 | ஏசீஏ -5 |
| | பிரதான பேரேட்டின் வேறு பெறுகைகள் | | | - | |
| - | **மொத்த வருமானமல்லாத பெறுகைகள்(ஆ)** | | **275,632,886** | **447,845,420** | |
| - | **மொத்த வருமான பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் இ = (அ)+(ஆ)** | | **276,542,736** | **450,755,420** | |
| | **திறைசேரி அனுப்பீடு (ஈ)** | | 2,788,183 | 355,051 | |
| | **நிகர வருமான பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் உ = (இ)-(ஈ)** | | 273,754,553 | 450,400,369 | |
| | **கழி – செலவினங்கள்** | | | | |
| | **மீண்டெழும் செலவினம்** | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| - | **மொத்த வருமானமல்லாத பெறுகைகள்(ஆ)** | | | | |
| 115,320,000 | வேதனாதிகள், சம்பளங்கள், பிற ஊழிய நன்மைகள் | **5** | 109,690,082 | 98,176,842 | **ஏசீஏ - 2(ii)** |
| 98,700,000 | ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | **6** | 68,183,852 | 43,517,457 | |
| 19,250,000 | உதவுதொகை, மானியம், மாற்றல்கள் | **7** | 18,688,727 | 17,980,424 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | **8** | | | |
| - | பிற மீண்டெழும் செலவினம் | **9** | | | |
| **233,270,000** | **மொத்த மீண்டெழும் செலவினம் (ஊ)** | | **196,562,661** | **159,674,723** | |
| | **மூலதனச் செலவினம்** | | | | |
| 1,500,000 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | **10** | 1,375,400 | 709,749 | **ஏசீஏ - 2(ii)** |
| 276,000,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | **11** | 83,669,711 | 279,344,079 | |
| - | மூலதன மாற்றல்கள் | **12** | - | - | |
| - | நிதி சொத்துக்களின் கொள்வனவு | **13** | - | - | |
| 500,000 | திறன் விருத்தி | **14** | 327,676 | 663,200 | |
| - | பிற மூலதனச் செலவினம் | **15** | - | - | |
| **278,000,000** | **மொத்த மூலதனச் செலவினம் (எ)** | | **85,372,787** | **280,717,028** | |
| | வைப்புக் கொடுப்பனவு | | 245,579 | 32,128,384 | **ஏசீஏ -4** |
| | முற்பணக் கொடுப்பனவு | | 11,219,831 | 10,612,288 | **ஏசீஏ -5** |
| | ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்கு கொடுப்பனவு | | | | |
| | **பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)** | | **11,465,410** | **42,740,672** | |
| | **மொத்த மூலதனச் செலவினம் ஒ = (ஈ+உ+ஊ)** | | **293,400,853** | **483,132,423** | |
| - | **டிசம்பர் 31 அன்றுள்ள மீதி ஊ = (உ-ஐ)** | | (19,646,304) | (32,732,054) | |
| | **கட்டு நிதி இணக்க கூற்றின்படி மீதி** | | (19,646,304) | (32,732,054) | **ஏசீஏ -7** |
| | **டிசம்பர் 31 அன்றுள்ளவாறு கட்டுநிதி மீதி** | | - | - | **ஏசீஏ -3** |

## 3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ –பீ

### நிதி நிலைமை பற்றிய கூற்று

### 2022 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு

| | குறிப்பு | உண்மையான 2022 | 2021 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **நிதியல்லா சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் | ஏசீஏ-6 | 160,399,842 | 146,792,044 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5 (ஏ) | 19,494,871 | 19,369,248 |
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | ஏசீஏ -3 | - | - |
| **மொத்த ஆதனம்** | | **179,894,713** | **166,161,292** |
| **தேறிய சொத்துக்கள்/ பங்கு** | | | |
| நிகர சொத்து | | 19,494,853 | 19,224,328 |
| சொத்து,பொறித்தொகுதி உபகரண ஒதுக்கு | | 160,399,842 | 146,792,044 |
| வாடகை, பணி முற்பண ஒதுக்கு | ஏசீஏ - 5 (பி) | - | - |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்கு | ஏசீஏ -4 | 18 | 144,920 |
| முற்பண மீதி | ஏசீஏ -3 | | - |
| **மொத்த பொறுப்புக்கள்** | | 179,894,713 | **166,161,292** |

பக்க இலக்கம் 1 முதல் 7 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 8 முதல் 55 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| …………………… | ……………… | ………………………………… |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
| பெயர்: | பெயர்: | பெயர் : |
| பதவி : | பதவி : | |
| திகதி :2023.02.27 | திகதி :2023.02.27 | திகதி :2023.02.27 |
| K.M.M. Siriwardana<br>Secretary to the Treasury and<br>Secretary to the Ministry of Finance,<br>Economic Stabilization and National Policies<br>The Secretariat<br>Colombo 01. | Jude Nilukshan<br>Director General<br>Department of National Budget<br>General Treasury<br>Colombo 01 | G.D.M. Muditha Gunarathna<br>Accountant<br>Department of National Budget<br>General Treasury<br>Colombo 01 |

## 3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

ஏசீஏ –சீ

### காசுப் பாய்ச்சல் கூற்று
### 2022 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த காலப்பகுதிக்கானது

| | உண்மையான | |
|---|---|---|
| | 2022 | மீள் சீராக்கப்பட்டது 2021 |
| | ரூபா | ரூபா |
| <u>தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்து காசுப் பாயச்சல்</u> | | |
| மொத்த வரி பெறுகைகள் | - | - |
| கட்டனம்,அபராதம், தண்டப்பணம், உரிமங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானமல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனையவற்றிலிருந்துசேகரிக்கப்பட்ட வருமானம் | 20,261,825 | 39,177,897 |
| பெறப்பட்ட கட்டுநிதி | 264,438,000 | 410,292,000 |
| முற்பண அறவீடு | 11,770,213 | 12,177,795 |

| | | |
|---|---|---|
| வைப்புப் பெறுகை | 100,677 | 21,396,032 |
| **<u>தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (அ)</u>** | **296,570,715** | **483,043,724** |
| | | |
| **<u>கழி - காசு செலவிடல்:</u>** | | |
| ஆள்சார் வேதனாதிகள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவு | 177,278,244 | 141,026,699 |
| மானியம் மற்றும் மாற்றல் கொடுப்பனவுகள் | 18,688,727 | 17,980,424 |
| பிறசெலவின தலைப்புகளுக்கான செலவினம் | 221,122 | (60,000) |
| திறைசேரிக்கு செலுத்தப்பட்ட முற்பணம் | 2,788,183 | 355,051 |
| முற்பணக் கொடுப்பனவு | 11,976,074 | 10,896,138 |
| வைப்புக் காடுப்பனவு | 245,579 | 32,128,384 |
| **தொழிற்பாடுகளுக்காக செலவிடப்பட்டமொத்த காசுப் பாய்ச்சல் (ஆ)** | **211,197,928** | **202,326,696** |
| | | |
| **தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்டதேறிய காசுப் பாய்ச்சல் (இ )=(அ)-(ஆ)** | **85,372,787** | **280,717,028** |
| | | |
| **<u>முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசு</u>** | | |
| வட்டி | - | - |
| பங்கிலாபம் | - | - |
| சொத்து விற்பனை, பௌதிக ஆதன விற்பனை | - | - |
| கடன் அறவீடுகள் | - | - |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்டகாசு (ஈ)** | **-** | **-** |
| | | |
| **<u>கழி - காசு செலவிடல்:</u>** | | |
| பௌதிக சொத்து கொள்வனவு அல்லது நிர்மானம் அல்லது வேறு முதலீடுகளை கையகப்படுத்தல் | 85,372,787 | 280,717,028 |
| **முதலீட்டு செயற்பாட்டுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (உ)** | **85,372,787** | **280,717,028** |
| | | |
| **முதலீட்டு செயற்பாட்டிலிருந்து தேறிய காசு(ஊ)=(ஈ)-(உ)** | **(85,372,787)** | **(280,717,028)** |
| **முதலீட்டு செயற்பாட்டிலிருந்து தேறிய காசு(ஊ)=(ஈ)-(உ)** | **-** | **-** |
| **<u>நிதி செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்</u>** | | |
| உள்நாட்டு கடன்பெறுகை | - | - |
| வெளிநாட்டு கடன்பெறுகை | - | - |
| பெறப்பட்ட மானியங்கள் | - | - |
| **நிதி செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்டமொத்த காசு (ஏ)** | **-** | **-** |
| | | |
| ***<u>கழி - காசு செலவிடல்:</u>*** | | |
| உள்நாட்டு கடன்பெறுகை | - | - |
| வெளிநாட்டு கடன்பெறுகை | - | - |
| **நிதி செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்டமொத்த காசு (ஏ)** | **-** | **-** |
| | | |
| **நிதி செயற்பாடிலிருந்து பெற்ற தேறிய காசு (ஒ)=(ஏ)-(ஐ)** | **-** | **-** |

| | | |
|---|---|---|
| **காசில் தேறிய மாற்றம் (ஓ) = (எ) –(ஒ)** | **-** | **-** |
| **சனவரி 01 அன்று ஆரம்ப காசு மீதி** | **-** | **-** |
| **டிசம்பர் 31அன்று இறுதி காசு மீதி** | **-** | **-** |

## 3.4 நிதியியற் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 3.4.1. அறிக்கையிடல் அடிப்படை

**1) <u>அறிக்கையிடல் காலப்பகுதி</u>**

இந்த நிதிநிலை அறிக்கைகளுக்கான அறிக்கையிடல் காலம் 2022 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரை ஆகும்.

**2) <u>அளவீடுகளின் அடிப்படை</u>**

நிதிநிலை அறிக்கைகள் வரலாற்றுச் செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சில சொத்துகளின் வரலாற்றுச் செலவு மறுமதிப்பீட்டுப் பெறுமதிக்கு திருத்தப்பட்டுள்ளது. வேறு வகையில் குறிப்பிடப்படாவிட்டால், மாற்றியமைக்கப்பட்ட பெறுமதி அடிப்படையிலேயே கணக்குகள் தயாரிக்கப்படுகின்றன.
நிதி அறிக்கைகளின் விவரங்கள் இலங்கை ரூபாயில் அண்மித்த ரூபாய்க்கு வழங்கப்படுகின்றன.

**3) <u>வருமானத்தின் அங்கீகாரம்</u>**

பரிவர்த்தனை மற்றும் பரிமாற்றமல்லாத வருமானங்கள் தொடர்புடைய வருமான காலத்தைப் பொருட்படுத்தாமல் கணக்கியல் காலத்திலான வருமானங்களாக கருதப்படும்.

**4) <u>ஆதனம், பொறித்தொகுதி, உபகரணத்தின் அங்கீகாரம் மற்றும் அளவீடு (PP&E)</u>**

